வில்லை. அதனால் அந்த இல்லத்தைக் கொடுப்பதற்கு மறுத்தார்கள் என்கின்ற தகவல் சரியானது அல்ல என்பதையும் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9·50]

திரு. ர. ஜெயமணி: பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவாலயத்தில் இரவிலே விளக்கு எரிவதில்லை. எனவே, இரவிலே அங்கே ஒரு விளக்கு எரிவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? நான் இதைப்பற்றி சர்க்காருக்கு எழுதியிருக்கிறேன். கவனிக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே தவிர, அது ஒரு காடு போல் கிடக்கிறது. எனவே, ஒரு விளக்கு அங்கே எரிவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களை அடக்கம் செய்த இடத்திலே நினைவாலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நினைவாலயத்திலே விளக்கு மாத்திரம் எரிய வேண்டுமென்ற முடிவில் இந்த அரசு இல்லை. அது இன்னும் சிறப்பாக அமைக்கப்பட வேண்டுமென்ற முயற்சியில் அரசு தகுந்த வரைவுகளைக் கேட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 8 கேள்விகளுக்கு 50 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 12 கேள்விகள் இருக்கின்றன. கேள்விகளுக்கு எவ்வளவு நேரம் தர முடியும் என்பதுதான் பிரச்னை. கேள்வி எண். 69.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து வெளிவந்துள்ள பயிற்சியாளர்கள்.

*வினா எண். 69—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 1975–76, 1976–77 ஆண்டுகளில் வெளிவந்துள்ள மொத்த பயிற்சியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அத்தனை பேருக்கும் வேலைவாய்ப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) தமிழ்நாட்டிலுள்ள 31 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று தேர்ச்சிபெற்றவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

1975–76	..	..	.. 6,180
1976–77	..	..	.. 5,143

(ஆ) அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று தேர்ச்சி பெற்று வெளிவந்துள்ள மொத்த பயிற்சியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்வது என்பது மாநிலத்தின் தொழில் வளர்ச்சி அபிவிருத்தி மற்றும் பொருளாதார நிலைமையைப் பொறுத்துள்ளதாகும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சி முடித்துவிட்டு வந்திருக்கின்ற பயிற்சியாளர்களுக்கு, அவர்களுடைய வருமானத்தைக் கருதி, அவர்களில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்ற கொள்கையின் அடிப்படையில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்ற விகிதாசார அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்பது ஒரு நாட்டின் துரதிருஷ்டம்தான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வேலைவாய்ப்பு வேண்டுமென்று கேட்டால், தொழிற்பயிற்சி படித்து வாருங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேலை இல்லை. இந்தச் சூழ்நிலையில் அரபு நாடுகளில் வேலை வாய்ப்பு இருப்பதாக அறிகிறோம். அதை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு ஏஜென்சி ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 'ஓவர்சீஸ் மேன் பவர் கார்ப்பரேஷன்' அமைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை நேற்றையதினம் முதல் அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அதன் மூலம் வேலைவாய்ப்புகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தொழில் நிறுவனங்களில், 'பிஎச்இஎல்' போன்றவற்றில் வேலைக்கு ஆட்கள் எடுக்கும்போது, லோகல் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலே ஆட்கள் எடுக்க வேண்டும் என்று தி.மு.க. ஆட்சியிலே போட்ட உத்தரவு, அவசர காலத்தில் ரத்து செய்யப் பட்டிருக்கிறது. அதை மீண்டும் கொண்டு வருவதன் மூலம், இங்கே ஐ.டி.ஐ. போன்றவைகளில் படித்து பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க வகை ஏற்படும். ஆனால், இப்போது அப்படி பயிற்சி பெற்றவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. மற்ற மாநிலங்களிலே இருந்து, அகில இந்திய அடிப்படையில், அதிக மார்க்குகள் வாங்கியவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. அங்கே அதிகமான மார்க்குகள் போடுகிறார்கள். ஆகவே, இங்கே உள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது மத்திய அரசோடு நாம் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டிய ஒரு கொள்கை பற்றிய கேள்வியாக இருக்கிறது.

புதுக்கோட்டையில் உள்ள அருங்காட்சியகம்.

*வினா எண். 70— திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் உள்ள அருங்காட்சியகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை நகரின் மையப்பகுதியில் புதிய கட்டடம் கட்டி அருங்காட்சியகத்தை அங்கு மாற்ற கருத்துரு ஒன்று பரிசீலனையில் இருக்கிறது.